**நிலத்திலிருந்து கூழாங்கல் /கல் நீக்கும் கருவி**

ஸ்ரீ. K.விஸ்வநாதன்,
293 ஆசிரியர்கள் நகர், குள்ளம்பாளையம் அஞ்சல்,
கோபிச்செட்டிப்பாளையம் தாலுகா
ஈரோடு மாவட்டம்
(அலைபேசி எண்: 09443205244)

| | | |
|---|---|---|
| வயது | : | 52 |
| கல்வி தகுதி | : | 10 ஆம் வகுப்பு |
| அனுபவம் | : | 30 ஆண்டுகள் |
| அங்கீகாரம் | : | • இவருடைய உபகரணங்களை ஒரு கண்டுபிடிப்பு என்று அறிவியல் நிலையம் அங்கீகரித்துள்ளது.<br>• இவருடைய கண்டுபிடிப்பு தி இந்து நாளிதழில் மற்றும் ஊடகங்களில் வெளியாகியுள்ளது. |

**கண்டுபிடிப்பு விளக்கம்:**

ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிப்பாளையம் தாலுகா, குள்ளம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. K. விஸ்வநாதன் டிராக்டரால் இயங்கும் கல் நீக்கும் கருவியை உருவாக்கியுள்ளார். இதற்கு 35 HP ஆற்றல் தேவைப்படுகிறது. இவற்றில் கன்வேயர் செயின்ஸ் கியர் பாக்ஸ், PTO தண்டின் அடிப்பாகத்தில் முள் கம்பிகள் இணைக்கப்பட்டுள்ளது. இந்த கருவியின் பின்புறத்தில் டிப்பர்கள் பொருத்தப்பட்டு கன்வேயர் இயங்கும் போது ஒரு நிமிடத்திற்கு 12 -16 முறை சுழல்கிறது. அதே நேரத்தில், முள் கம்பிகள் மண்ணை இளகுவாக்கி மற்றும் கற்கள் மற்றும் சிறிய கூழாங்கற்களை கன்வேயர் சங்கிலியில் செலுத்தி டிப்பரில் சேகரிக்கிறது.

**கண்டுபிடிப்பு நடைமுறை பயன்பாடு :**

இந்த கல் நீக்கும் கருவி மண்ணின் 15 – 25 செ.மீ ஆழத்தில் உள்ள 25 மி.மீலிருந்து 120 மி.மீ அளவு கொண்ட கற்களை எடுத்துக் கொள்கிறது. ஒரு நாளில் 5 ஏக்கர் நிலத்தை இக்கருவியின்

மூலம் சுத்தம் செய்யலாம். நிலத்திருந்து கல் நீக்கம் பணிக்கு இக்கருவி பணியாளர்களின் தேவையை (60%-70%) வரை குறைக்கிறது. இது எளிதாக நாற்றங்கால் தயாரித்தல் மற்றும் மண்ணின் இயற்பியல் பண்புகளை மேம்படுத்துகிறது. மலைபாங்கான மற்றும் உலர் பகுதிகளில் இந்தக் கண்டுபிடிப்பு கூடுதல் பணியாளர்கள் இன்றி கிழங்கு மற்றும் கிழங்குகள் பயிர் அறுவடை செய்ய விவசாயிகளுக்கு சிறந்ததாக இருக்கிறது. இக்கருவி ஒன்றின் விலை ரூ.3,00,000/-.

**ஆதாரம்:**

பேராசிரியர் மற்றும் தலைவர்
MYRADA வேளாண் அறிவியல் நிலையம்,
272, பெருமாள்நகர், புதுவள்ளியம்பாளையம்,
கோபிசெட்டிப்பாளையம், ஈரோடுமாவட்டம்.
தொலைபேசி எண்: 04285 -241626, 241727